செ.வெ.எண்: 190 நாள்:17-06-2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் ஆகியோர் தலைமையில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள், திரு.அப்துல் வகாப்,எம்.எல்.ஏ அவர்கள், திரு.ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ அவர்கள், திரு.சண்முகையா எம்.எல்.ஏ அவர்கள், திரு.பி.ராஜா எம்.எல்.ஏ அவர்கள், திரு.எஸ்.சதன்திருமலைகுமார் எம்.எல்.ஏ அவர்கள், திரு.ரூபி.ஆர்.மனோகரன் எம்.எல்.ஏ அவர்கள், திரு.பழனி நாடார் எம்.எல்.ஏ அவர்கள், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் ஆகியோர் முன்னிலையில், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள, கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்குதல், உரவிநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறையின் இதர செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (17-06-2021) நடைபெற்றது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தென் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுத்துறையின் அலுவலர்கள், மற்றும் அவர்களது செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

தற்போது தென்மேற்கு பருவமழை இம்மாதம் துவங்கி உள்ளதால் , திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, விவசாய பாசனத்திற்கு தண்ணீர் முழுமையாக கிடைக்கும். இதுவரை 10 ஆண்டுகாலம் கூட்டுறவுத்துறையில் இல்லாத வளர்ச்சியினை, நமது அரசு செயல்படுத்தும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கொரோனா பேரிடர் காலத்தில் தமிழகத்தில் இருக்கின்ற, ஏழை எளிய விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் உதவுகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் அனைத்துதுறை அலுவலர்கள் இப்பணியில் ஈடுப்பட்டுள்ளார்கள். தற்போது விவசாய பணிகளின் ஆரம்ப கால கட்டம் என்பதால், தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் உடனடியாக வழங்கிடவும், அதே போல தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் புதிய உறுப்பினர்களை சேர்த்து அனைவருக்கும் கடன் வழங்கிட அனைத்து நடவடிக்கைகளையும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, எல்லா நியாய விலைக்கடைகளின் வாயிலாக, தற்போதைய கொரோனா பெருந்தொற்று காலத்தில் கொரோனா நிவாரணநிதி

முதல் தவணையாக ரூ.2000/- பொதுமக்களின் நலன் கருதி 99 சதவீதம் மக்களுக்கு வழங்கப்பட்டு பயனடைந்துள்ளார்கள். அதே போன்று தற்போது, தமிழக மக்களுக்கு 2ஆம் தவணையாக ரூ.2000/- கொரோனா நிவாரண நிதி மற்றும் 14 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் படி தமிழகம் முழுவதும் 2.10 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள். விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தை சிறப்பாக செய்வதற்கு அவர்களுக்கு தேவையான பயிர் கடன் வழங்குவதற்கும், அதே போன்று அனைத்து வங்கிகளிலும் எல்லா வகையிலான கடன் வழங்குவதற்கும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக அரசின் திட்டங்கள் ஏழை, எளிய மக்களுக்கு தற்போது சிறப்பாக சென்றடைகிறது. நெல்லை மாவட்டத்தில் விவசாயிகள் தங்களது விவசாய பொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட வேண்டும், என்றும் புதிய குளிர்பதன கிடங்கு அமைத்திட வேண்டும் எனவும் கோரிக்கைகள் வைத்துள்ளார்கள்.

விவசாயிகளுக்கு, அந்தந்த பகுதியில் பயிரிடுவதற்கு தேவையான உரங்கள் அனைத்தும் வழங்குவதற்கு, 2,000 டன்களுக்கு மேலான உரங்கள் கையிருப்பில் உள்ளது. அதே போன்று மாவட்டங்களில் உள்ள அனைத்து நியாய விலைகடைகளிலும் தரமான அரிசிகள் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். ஏதேனும் அரிசி பழுப்படைந்திருந்தாலும் அல்லது சேதமடைந்திருந்தாலும் அதனை கண்டிப்பாக பொதுமக்களுக்கு, வழங்கக் கூடாது. நல்ல தரமான அரிசியினை பொதுமக்களுக்கு வழங்கிட அலுவலர்கள் முழு கவனம் செலுத்த வேண்டும். பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்களுக்கு எந்த வகையான கடன்களும், கிடைக்கவில்லை என்கிற நிலை தற்போது இல்லை, என்பதை கூட்டுறவுத்துறை அலுவலர்கள் உறுதிப்படுத்தவேண்டும். தனிப்பட்ட நபர்களுக்கும் சுயஉதவிகுழுக்களுக்கும், விவசாயிகளுக்கும் கடன் வழங்க, இந்த பகுதியில் உள்ள மாவட்டங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் விவசாயிகளுக்கு 11,500 கோடி கடன் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தென்மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு உரம் தேவையான அளவு கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகள் விரும்பி கேட்கின்ற உரங்கள் உரக்கடைகளில் இருப்பு வைத்து தட்டுபாடின்றி வழங்கவேண்டும். கூட்டுறவுத்துறை தொடக்க வேளாண்மை சங்கம், விவசாய பெருமக்களுக்கு எளிதாக பயிர் கடன் மற்றும் உரவினியோகம் வழங்க வேண்டும். என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள், கேட்டுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.பெருமாள், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.அழகிரி அவர்கள், நன்றியுரை கூறினார்கள். மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி.சுபாஷினி, நான்கு மாவட்டத்தை சேர்ந்த கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எம்.கணேஷ்குமார், கூட்டுறவு வங்கி அலுவலர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**